*கவனிக்க.-2022.07.15 ஆந் திகதிய 2289 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2291 - 2022 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2022.07.29

*2291 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |


**கவனிக்க.-** (i) *நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *அற்றோணித் தத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஒகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1-B 82365-5,413 (2022/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்திற்கான பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2022

இரத்மலானை இலங்கை ஜேர்மனி தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2020 ஆம் வருடத்திற்கான பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்காக கீழே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **அடிப்படைத் தகைமைகள்** :

(அ) 2022.05.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கு குறையாமலும் 25 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித்தகைமைகள் : ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 04 பாடங்களில் திறமைச் சித்திபெற்றிருத்தல் வேண்டும். ஒரே அமர்வில் க. பொ. த. (சா./தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

03. **பயிற்சிநெறி.**- பயிற்சி நெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்களுக்குக் கீழ்வரும் பயிற்சி நெறிகள் மற்றும் பயிற்சி நெறிகளுக்கு அடிப்படையான கால எல்லைக்குள் பாடநெறியை தொடர்வதற்காக இடமளிக்கப்படும். பாடநெறி நடைபெறுவது சிங்கள மொழியில் மாத்திரமே ஆகும். கீழ்வரும் பாடநெறி தொடர்பாக ஒரு பாடநெறிக்கு 25 பேர்கள் வீதம் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

| | |
|---|---|
| 1. டீசல் என்ஜின் இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் | - வருடம் 3 (NVQ 4) |
| 2. ஒட்டும் நுட்பவியலாளர்/ஒட்டுநர் | - வருடம் 3 (NVQ 4) |
| 3. மின் தொழில்நுட்பவியலாளர் (சக்தி) | - வருடம் 3 (NVQ 4) |
| 4. இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் (பொது) | - வருடம் 3 (NVQ 4) |

04. **விண்ணப்பம்.**- விண்ணப்பதாரர்களினால் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ற வகையில் 297 × 210 மி. மீ. (A4) வெள்ளைத்தாளில் தயாரித்துச் சரியான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும். சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பபத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. **பயிற்சி நெறிக்குத் தேர்ந்தெடுத்தல்.**-

1. எழுத்து மூலமாகவும் செயல் மூலமாகவும் ஆன பரீட்சிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதும் 7 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் எழுத்து மூலமான பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. எழுத்து மூலப் பரீட்சை கணிதம் அடிப்படை தொழில்நுட்ப அறிவு, மற்றும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்து மூலமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்தப் பயிற்சி நெறிகளின் தன்மைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

3. எழுத்துமூல மற்றும் தொழிற் தகைமை பரிசோதனைகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அந்தந்தப் பயிற்சி நெறிக்குத் தேர்ந்தெடுகசுப்படுவர்.

06. **பரீட்சைக்கான மொழி.**- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

07. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்காக மீள வழங்கப்படாத ரூபா 500 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் புகையிரத பொது முகாமையாளருக்கு வரவு வைத்து மக்கள் வங்கி கணக்கு இலக்கம் : 176- 1001-2-9027313 இற்கு வைப்பிலிட வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (அதன் பிரதி ஒன்றினை தம் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.)

08. **பரீட்சை நிலையம்.**- சகல தராதரங்களையும் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை கொழும்பில் உள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

09. **உறுதி மொழியைக் கைச்சாத்திடல்.**- பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சி நெறிக்கான குறித்த கால எல்லைக்குள் பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பயிலுவதாகத் தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தம் ஒன்றிற்கு இணங்கப்படுதல் வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்குத் தொழில் வழங்கப்படுவதற்கான உத்தரவாதத்தினை திணைக்களத்தினால் வழங்கப்படுவதில்லை.

11. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ற வகையில் விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து "துணை பொது முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு), இலங்கைப் புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்லை வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இ. ஜெ. பு. தொ. ப. நி. - 2022" எனக் குறிப்பிடல் வேண்டும்.

12. விண்ணப்பபத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி 2022.08.29 ஆகும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

ஜே. ஐ. டீ. ஜயசுந்தர,
புகையிரதப் பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரதச் சேவைகள்,
கொழும்பு - 10,
2022, யூலை 22.

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்திற்கான பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2022

அலுவலக உபயோகத்திற்காக

| |
|---|
| |

01. முழுப்பெயர் (சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில்) :
சிங்களம் : ........................................................................................................................
ஆங்கிலத்தில் : ........................................................................................................................
02. முகவரி :
சிங்களம் : ........................................................................................................................
ஆங்கிலத்தில் : ........................................................................................................................
03. மாவட்டம் : ........................................................................................................................
04. பிறந்த திகதி : ........................................................................................................................
05. பால் (ஆண்/பெண்) : ........................................................................................................................
06. தொலைபேசி எண் : .................................................... வாட்ஸ்அப் இல. : ....................................................................
07. கல்வித் தராதரம் : (க. பொ. த. சாதாரண தரம்)
முதலாம் அமர்வு : .................................... பரீட்சை எண் : ....................................

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| 1 | ..................................... | ...................... |
| 2 | ..................................... | ...................... |
| 3 | ..................................... | ...................... |
| 4 | ..................................... | ...................... |
| 5 | ..................................... | ...................... |
| 6 | ..................................... | ...................... |
| 7 | ..................................... | ...................... |
| 8 | ..................................... | ...................... |
| 9 | ..................................... | ...................... |
| 10 | ..................................... | ...................... |

08. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி : ...................................................................

09. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வர்த்தமானப் பிரசுரத்தின் மூலம் தனக்கு விருப்பமான தொழில் பயிற்சிகள் இரண்டை முறையாகக் குறிப்பிடவும்.

01. ...................................................................  02. ...................................................................

10. பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கீழ்க்காணும் பெட்டியினுள் ஒட்டவும்.

| |
|---|
| |

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் தவறானது என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவராக கருதப்படுவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

07-653

---

**இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மொரட்டுவை**

**கல்வி அமைச்சு**

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

**தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2022**

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்து 2022 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் :**

01. (அ) வயது : 2022.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வி : க. பொ. த. (சா./த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விசேட திறமை-**

மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித்தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினை பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

02. **பயிற்சி போதனைகள்.**- சிங்களத்தில் எல்லா பாடநெறிகளும், மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் தமிழிலும் நடத்தப்படும். சிங்கள மொழியறிவுள்ள தமிழ் மாணவர்கள் மற்றைய பாடநெறிகளையும் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (ஆ) இலண்டன் சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழிமூலம் பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

03. **நுழைவுத்தேர்வு.**- தேவையான தகைமைகளையுடைய, கீழே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) பரீட்சைக்கான மொழி : தமிழ்/சிங்களம்

(ஆ) பரீட்சை நிலையம் : அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்து செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

**எழுத்துமூலப் பரீட்சை.**- கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம்.**- விண்ணப்பதாரிகள் ரூபா 1,000 ஐ ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில், கீழேயுள்ள கணக்கிற்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**கணக்கு**: கணக்காளர், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், மொரட்டுவைக் கிளை, கணக்கு இலக்கம் : 681490

அழிந்துபோன, மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனுமதிப் பரீட்சைக்கு தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாக கவனத்திற்கொள்க.

05. **ஆரம்பத் தேர்வு முறை.**- எழுத்துமூலப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ் வெட்டுப்புள்ளி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

06. **இறுதித் தேர்வு முறை.**- நேர்முகப்பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறைப் பரீட்சையின் 40% உம், நேர்முகப் பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

07. **பயிற்சி நெறி**

| இல. | பயிற்சிநெறி | பயிற்சிக் காலம் |
|---|---|---|
| 01 | மோட்டார் இயந்திரவியல் | 04 ஆண்டுகள் |
| 02 | மில்றைற்/வார்ப்பியல் | 04 ஆண்டுகள் |
| 03 | காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | 03 1/2 ஆண்டுகள் |
| 04 | வலு மின்சாரவியல் | 03 1/2 ஆண்டுகள் |
| 05 | ஆயுத இயந்திரவியல் | 03 1/2 ஆண்டுகள் |

| இல. | பயிற்சிநெறி | பயிற்சிக் காலம் |
|---|---|---|
| 06 | மெக்காற்றோனிக் (கைத்தொழில்) | 03 1/2 ஆண்டுகள் |
| 07 | வாகன மின்சாரவியல் | 03 ஆண்டுகள் |
| 08 | டீசல் இயந்திரவியல் | 03 ஆண்டுகள் |
| 09 | உருக்கியிணைத்தல் | 03 ஆண்டுகள் |
| 10 | வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் | 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவு செய்யப்படும்.

8. **பிணை முறி கைச்சாத்திடல்**: 04, 03 1/2, 03 வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

9. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A 4 அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, அதனுடன்

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்விச் சான்றிதழ்
(இ) இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ், ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் மற்றும் பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை கருத்தில் கொள்க.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுநர்களை சேர்த்தல் 2022" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளல்**

* www.cgtti.lk என்னும் இணையத் தளத்திலிருந்து
* நிறுவகத்திற்கு சமுகமளிப்பதன் மூலம்.
* பெயர் விலாசமிடப்பட்ட முத்திரையுடனான தபாலுறையினை நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம்.

10. **விண்ணப்ப முடிவு திகதி**.- விண்ணப்பங்கள் 2022.09.05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக "முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்" அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2022.11.11 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி, கல்கிசை.
(அங்குளானை சந்திக்கு அருகில்)
தொலைபேசி - 011-2605625.

## இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

## தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறி அனுமதிக்கான விண்ணப்பம் - 2022

| அலுவலக உபயோகத் திற்காக | Q | DQ | பரீட்சை இல.: | | | | | நேர்முகப் பரீட்சை இல. : | | பயிலுநர் இல. : | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

* ஆங்கிலத்தில் நிரப்பும் கெப்பிட்டல் எழுத்தினை உபயோகிக்கவும்.
* கீழே (* ) காட்டப்பட்டுள்ள இடத்தில் சரியான கூட்டினுள் ( ✓ ) என்னும் அடையாளத்தினை இடவும்.

01. (அ) முழுப்பெயர் (தமிழில்)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)

02. (அ) தபால் முகவரி (தமிழில்)

(ஆ) தபால் முகவரி (ஆங்கிலத்தில்)

(இ) மாவட்டம் (ஈ) பிரதேச செயலக பிரிவு (உ) மாகாணம்

(ஊ) மின்னஞ்சல் முகவரி (எ) தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நடமாடும் | | | | | | | | | |
| வதிவிடம் | | | | | | | | | |

03. (அ) பிறந்த திகதி : (ஆ) 2022.03.31 ஆந் தினத்தில் வயது

| வருடங்கள் | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|

(இ) தேசிய ஆளடையாள அட்டை இல. (ஈ) ஆண்/பெண் (*)

| ஆண் | | பெண் | |
|---|---|---|---|

04. கல்வித்தகைமை க. பொ. த. (சா. த.)

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாவது அமர்வில் (விசேட திறமைக்கான சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

| சுட்டெண் | | வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | | தரம் | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

05. விசேட திறமை அடிப்படையில் விண்ணப்பித்தால், இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் மாவட்ட/ தேசிய மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்ட வருடமும் துறையும் :

வருடம் : ____ துறை : ____

06. (அ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் மொழி (*)

| சிங்களம் | | தமிழ் | |
|---|---|---|---|

(ஆ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் பரீட்சை நிலையம் (*)

| கொழும்பு | கண்டி | காலி | பதுளை | அநுராதபுரம் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | | | | | |

07. (அ) கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை ____ (அ) திகதி ____

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் ஏதாவது பொய்யானவையென தெரிவின்முன்போ அல்லது பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாக கருதப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி

---

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

(அ) வங்கியின் பற்றுச்சீட்டு

(ஆ) கல்விச் சான்றிதழின் பிரதி

(இ) பிறப்புச் சான்றிதழின் பிரதி

(ஈ) இல. 05 இற்குரிய, சான்றிதழின் பிரதி

(உ) வயதெல்லை -16 | OK | 22+

(ஊ) நுளைவுத்தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளாரா?

(எ) பரீட்சித்தவர்

**விவசாயத் திணைக்களம் - மேல் மாகாண சபை**

ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்கல்வி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ 4) பயிற்சி பாடநெறி 2023

மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறிக்காக மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப்பாடநெறியானது சிங்கள மொழி மூலம் நடைபெறும். அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது.

2. இப்பாடநெறி பிரயோக, மற்றும் எழுத்து மூலப் பயிற்சி ஒன்றாக நடாத்தப்படும் இந்தப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் மூன்றாம் நிலைக் கல்வி, மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ 4) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும். பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :-

(NVQ 4) க்கு உரியவை

I. A-01S003M01 - விவசாயத்தின் அடிப்படைகள்
II. A-01S003M02 - நெல் மற்றும் பிற பயிர்களை ஸ்தானத்தில் மற்றும் பராமரித்தல்
III. A-01S003M03 - மறு பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
IV. A-01S003M04 - பூங்கனியள் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
V. A-01S003M05 - அறுவடையும் மற்றும் ஆரம்ப நடைமுறைகளும்
VI. A-01S003M06 - பண்ணை இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு
VII. A-01S003M07 - விவசாய விரிவாக்கத் திட்டத்தை அமுல்படுத்தல்
VIII. A-01S003BM01 - பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன்
IX. A-01S003BM02 - மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல்
X. A-01S003BM03 - குழு செயற்பாடு
XI. A-01S003BM04 - தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பயிற்சி

மற்றும் மேலதிகமாக கால்நடை வளர்ப்பு, நெற்செய்கை, மனைப் பொருளியல், தொழில் முயற்சி

மேலே கூறப்பட்ட விடயங்களினூடாக பாடங்களை சமர்ப்பிக்கும் போது புதிய விவசாய தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு உரியதாக புதிய கண்டுபிடிப்புக்கள் (உதாரணம்:- விளைச்சல் தொழில்நுட்பம், மும்முறை செய்கை முறை), சுயதொழில் உபாய மார்க்கங்கள் (உதாரணம் :- நில அளவினை ஸ்தாபித்தல், பண்ணைக் கணக்கு, பண்ணை உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் உழவு இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி அழித்தல்) மற்றும் தகவல்களை தயாரித்தல், புதிய முறைகளுக்காக பயிற்சிகளை வழங்குதல் (உதாரணம்:- கணினிப் பாவனை) மேற்கொள்ளப்படும். அவ்வாறே மாணவ மாணவிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்த, மற்றும் தற்போதைய தேவையாகக் காணப்படும் விவசாயக் கொள்கை தொடர்பாக அறிவொன்றினைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

3. **பாடநெறியினை நடாத்திச் செல்லுதல்.-**

ஒரு வருட காலத்தைக் கொண்ட பாடநெறியானது மூன்று தவணைகளைக் கொண்டது. இரண்டாவது தவணையின் இறுதியில் அதாவது மொடியூல் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் எழுத்து மற்றும் பிரயோக ரீதியான பரீட்சை நடைபெறும். மீண்டும் (மொடியூல்) கையேடு கால எல்லையினுள் தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது தவணையினுள் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தவணையில் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தாம் தெரிவு செய்த விடய துறையினுள் வெளிவாரியான விவசாய இயக்கங்களுடன்/ ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்திட்ட செயற்பாடொன்றினை மேற்கொள்ள வேண்டும். அவ்விடயம் பூர்த்தியானதும் எழுத்து மற்றும் பிரயோக ரீதியிலான பரீட்சை நடைபெறும். பாடநெறியில் கலந்து கொள்வது 85% ஆக இருந்து, தொடர்ச்சியான மதிப்பீட்டின் பின் மாணவ மாணவிகளுக்கு பாடநெறியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறே இந்த மாணவ மாணவிகளுக்காக மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் துறை சார்ந்த கள உதவியாளர் (விவசாயம்) (NVQ 4) தொழில் தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்படும்.

**4. ஆட்சேர்ப்பு விதி முறைகள்.-**

**4.1 கல்வித் தகைமை.-**

(i) கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் (சா./த.) சிங்கள மொழி (மொழி மற்றும் இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வியும் தொழில்நுட்பமும் (விவசாயம், தையல்வேலை, வீட்டுத்தோட்டம், மனையியல், வர்த்தகமும் கணக்கியலும், மோட்டார் கைத்தொழில்) ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

**4.2 பிற தகைமைகள் :**

(i) எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று 17 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருக்க வேண்டும்;

(iii) பிரயோக ரீதியிலான விவசாய செயற்பாடுகளில் ஈடுபட சிறந்த உடல் தேகாரோக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக அரச வைத்திய அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று பாடநெறியின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) ;

(iv) தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

(v) விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நபர்கள் மற்றும் அதனை தொழில் ஒன்றாக கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் தொடர்பாக விஷேட கவனம் ஒன்று செலுத்தப்படும்;

(vi) விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன் உள்ள மூன்று வருடங்களுள் ஆகக் குறைந்தது இரண்டு வருடமாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்துள்ளார் என்பதற்கு வசிக்கும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழினால் உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்கு மேலதிகமாக

கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் வசிக்காத நபர் ஒருவர் பாடநெறியைக் கற்பதற்கு விருப்பத்தை தெரிவித்தால் அவருக்கும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எவ்வாறான போதும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் போது மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேல் மாகாணத்தில் வசிப்பவர்களிடமிருந்து போதிய அளவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து வெளி மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**5. பாடநெறிக்குரிய ஊக்குவிப்புப் படி :**

(i) பயிற்சிக் காலத்தினுள், பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஒருவருக்கு ஐநூறு ரூபா (ரூபா 500.00) பயிற்சி நெறி ஊக்குவிப்பு படி செலுத்தப்படுவதுடன் அது உணவுப் பானங்களுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்படும்;

(ii) பயிற்சி பெறும் காலத்தினுள் எல்லா மாணவருக்கும் கட்டணமின்றி விடுதி வசதி வழங்கப்படும்.

**6. பாடநெறியில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் :**

(i) ஆயிரம் ரூபா (ரூபா 1,000.00) வைப்பாக வைக்க வேண்டும்;

(ii) பயிற்சியின் பின்னர் விவசாயத்தில் ஈடுபட அடிப்படை வசதிகள் சிறு அளவேனும் இருக்க வேண்டும்;

(iii) பயிற்சியின் பின்னர் அரச சேவையில் வேலை ஒன்றை வழங்க, மேல் மாகாண சபையோ மத்திய அரசோடு உட்பட்டிருக்கவில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது;

(iv) பயிற்சி பாடநெறி நடைபெறும் காலத்தினுள் தாபனத்தினால் பேணப்படும் பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதாக எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்;

(v) பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச்செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

7. இங்கு கீழே காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 8 1/2 × 12 (A4) அங்குல அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து 2022, ஒற்றோபர் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "மேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், 7 ஆவது மாடி, இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "2023 ஆம் ஆண்டுக்கான ஒரு வருட தொழில் பயிற்சி விவசாயப் பாடநெறிக்கான விண்ணப்பப் படிவம்" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேலதிக தகவல்களை பெற https://agridept.wp.gov.lk வலைத்தளதிலிருந்து பெறவும்.

(i) ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு மேல் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்;

(ii) ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப் படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்;

(iii) தற்போது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ள மாணவ மாணவிகள் ஆர்வம் காட்டுகின்றபடியால் நேர்முகப் பரீட்சையின் போது பாடசாலையை விட்டு விலகிச் சென்ற சான்றிதழ் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

(iv) தாம் கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பிரதேசத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சான்றிதழ்கள், கல்வித் தகைமை மற்றும் வேறு தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்;

(v) தேசிய ஆள் அடையாள அட்டையுடன் கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உத்பலா அமரகோன்,
மாகாண விவசாயப் பணிப்பாளர்,
(மேல் மாகாணம்).

மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் (மேல் மாகாணம்),
7 ஆவது மாடி,
இலக்கம் 204,
டென்சில கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.
2022, யூலை 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹோமாகம (ஆண்) வல்பிட (பெண்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்பயிற்சி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறி 2023 ஆம் வருடத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளுதல்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :..........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

2. முதலெழுத்துடன் பெயர் :..........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

3. (i) நிரந்தர முகவரி :..........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
(ii) வதிவிட மாவட்டம் :..........................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
கிராம அலுவலர் பிரிவு : ..........................................................................................

4. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

5. முதலெழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில்) :

6. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-

(ii) வதிவிட மாவட்டம் :

(iii) கையடக்க தொலைபேசி இலக்கம் :

(iv) இல்லத் தொலைபேசி இலக்கம் :

(v) ஈமேய்ல் (Email) : ..........................................................................................................

7. பால் :

பெண் ☐ ஆண் ☐

8. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

(ii) அடையாள அட்டை வழங்கிய ஸ்தாபனம் மற்றும் திகதி :...........................................
.......................................................................................................................................

9. தந்தை அல்லது பாதுகாவலர் பெயர் : ..........................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

10. தந்தை அல்லது பாதுகாவலர் முகவரி : ..........................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

11. கல்வித் தகைமை :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை (------ ஆண்டு) (முதலாம் அமர்வு) :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை (------ ஆண்டு) (இரண்டாம் அமர்வு) :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சை (------ ஆண்டு) :

| சித்தியெய்திய பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

12. பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும்
(i)
(ii)
(iii)

13. நீங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலோ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலோ/தாபனம் ஒன்றிலோ பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? அப்படியாயின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடுங்கள் :

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

07-669

---

## திருத்தம்

### விவசாய அமைச்சு

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2018 (2022)

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2018 (2022) இன் பொருட்டு விண்ணப்பம் கோரப்பட்டு இருந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2022.06.24 ஆந் திகதிய 2286 ஆம் இலக்க இலங்கை வர்த்தமானியின் I ஆம் பகுதியின் (II அ) பந்தியின் 361 ஆம் இலக்க அறிவித்தலில் 13 (ஆ) இன் கீழ் “ஒருபாடத்திற்கு ரூபா 600.00” என்பதற்குப் பதிலாக “ஒரு பாடத்திற்கு ரூபா 300.00” எனவும், வர்த்தமானி அறிவித்தலில் 09 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி “2022 ஓகத்து மாதம் 26 ஆந் திகதி” எனவும் திருத்தம் செய்கின்றேன்.

03. அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றம் பெறவில்லை.

கலாநிதி கே. ஏ. சீ. எச். ஏ. கொத்தலாவல,
கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,

2022, யூலை 25.

07-664

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.